விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 044 வள்ளுவர் ஆண்டு 2056 தை 19 சனிக்கிழமை (01.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வடக்குக்கு வரும் நிதியை ஏன் திருப்பி அனுப்புகின்றீர்கள்?

## யாழில் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பிய அநுர

(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்படும்போது உரிய வகையில் செலவு செய்யாமல் மீண்டும் மத்திக்கு ஏன் திருப்பி அனுப்புகின்றீர்கள்? என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாரிகளைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார். (04ஆம் பக்கம் பார்க்க)



## கடவுச்சீட்டு அலுவலகம் யாழில் அமைக்கப்படும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் 15

## பொலிஸில் இணைய தமிழ் இளைஞர், யுவதிகள் பின்னடிக்கின்றனர் - அநுர

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் திணைக்களத்தில் இணைவதற்கு தமிழ் இளைஞர், யுவதிகள் பின்நிற்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்ஜனாதிபதி அநுர குமார தலைமை 15

## காலியில் துப்பாக்கிச் சூடு 3 பேர் பலி

(காலி)

காலி, ஹினிதும, பனங்கல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக் 15

2025ஆம் ஆண்டுக்கான மாசி மாத இராசி பலன்கள் உள்ளே

# மக்களின் காணிகள் அவர்களுக்கே வழங்கப்படும்



## யாழில் ஜனாதிபதி அநுர உறுதி

(யாழ்ப்பாணம்)

மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களுக்கே வழங்கப்படும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் செய்யும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

# சிவபூமி திருக்குறள் வளாக திறப்பு விழா நாளை

## இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் மகாதேவன் தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் சிவபூமி அறக்கட்டளையால் நிர்மாணிக்கப்பட்ட திருக்குறள் வளாகம் நாளை இரண்டாம் 16

## மாவை சேனாதிராஜாவுக்கு ஜனாதிபதி நேரில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் 15

## வடக்கில் பொலிஸ் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

### யாழில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பொலிஸார் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை யில்லை. கிளிநொச்சி இராமநாதபுரம், வவுனியா ஈச்சங்குளம் பகுதிப் பொலிஸாரின் செயற்பாடுகளால் பொலிஸ் நிலையங்களை மூடுமாறு மக்கள் விரக்தியில் தன்னிடம் தெரிவித்த 15

## சுப்பர் டீசல் விலை குறைப்பு

(கொழும்பு)

சுப்பர் டீசலின் விலையை குறைப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தின் மாதாந்த 15

## மக்கள் நம்பும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும்

### ஜனாதிபதி அநுர

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தக் கருத்தை மாற்றும் வகையில்பொலிஸார் நடந்துகொள்ளவேண் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை (தேசிய பாடசாலை) பருத்தித்துறை பாடசாலை சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடல்

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை சிற்றுண்டிச்சாலையினை 2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.
இது தொடர்பான விலைமனுப் படிவம் மற்றும் மேலதிக தகவல்களை பாடசாலை அலுவலகத்தில் (அலுவலக நேரத்தில்) பெற்றுக் கொள்ளலாம்.

- விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 14.02.2025
- விலை மனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 15.02.2025 பி.ப 2.00 மணி

பிரதி அதிபர்
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

(C-2172)


# தனியார் வாகன இறக்குமதி வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு வாகனத்திற்கும் பொருந்தும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்ட தற்காலிக தடை நீக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து, விசேட நோக்க வாகனங்கள், வணிக மற்றும் சரக்கு போக்குவரத்து மற்றும் தனியார் வாகனங்களின் இறக்குமதி தொடர்பாக இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

# பேராசிரியர் புஸ்பநாதன் காலமானார்



வவுனியா நெளுக்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட வவுனியா பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அ.புஸ்பநாதன் அவர்கள் நேற்று காலமானார். (ம-7)


## கர்நாடக இசைக்கச்சேரி



அமரர் வித்துவான் ஸ்ரீ வே.கங்காதரன் நினைவாக

பாட்டு : ஸ்ரீ அபிலாஷ் கிரிப்ரசாத்
வயலின் : ஸ்ரீமதி நெய்வேலி லலிதா ராஜுலு
மிருதங்கம் : ஸ்ரீ ராம்கிரன் சிவசுப்ரமணியம்
கடம் : ஸ்ரீ அபிராம் சிலுகுரி
கஞ்சிரா : ஸ்ரீ அ.சண்முகப்பிரியன்

காலம்
02.02.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00
இடம்
துர்க்காதேவி மணி மண்டபம், கோவில் வீதி, நல்லூர்.

அனுமதி இலவசம்

(3292)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :
**077 623 4204, 076 755 8606**

(3293)

## மணிவிழா வாழ்த்துக்கள்



கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றி ஓய்வுபெறும்
உயர்திரு.
**திருஞானம் யோண் குயின்ரஸ்**
அவர்களை வாழ்த்துகின்றோம்.

ஆசிரியனாய், கலாசாலை விரிவுரையாளனாய்
வலய, மாகாணக் கல்விப் பணிப்பாளனாய்
கல்வி வெளியீட்டுத் திணைக்கள
பணிப்பாளர் நாயகமாய்
ஏற்றமிகு படிகள் யாவும் கடந்து
முப்பத்தேழாண்டுகள் முழுமையாய்
பணிசெய்து, மணிவிழா கண்டு
ஓய்வுபெறும் எங்கள் ஆசானே
நின் ஓய்வுக்காலம் ஆரோக்கியமும்,
மகிழ்ச்சியும், இறை ஆசியும் நிறைந்த காலமாக
மிளிர நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1999/2000, 2001/2003 கல்வியாண்டு, கிறிஸ்தவ பாடநெறி ஆசிரியர்கள்

(3285)

யாழ்ப்பாணம்
சிவபூமி திருக்குறள் வளாகம், மாவிட்டபுரம்

## திறப்பு விழா



காலம் : 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு
இடம் : கீரிமலை வீதி, மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

பங்குபற்றும் தமிழகத்து அறிஞர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள்



மாண்புமிகு நீதியரசர்
உயர்திரு.அரங்க. மகாதேவன்
(இந்திய உயர்நீதிமன்றம், புதுடெல்லி)

தமிழக தினமணி பத்திரிகையின்
பிரதம ஆசிரியர்
உயர்திரு.கி.வைத்தியநாதன்

மாலை நிகழ்ச்சிகள் 3.30 மணிக்கு



திருமுறைக் கலாநிதி குமாரவயலூர்
தி.பாலசந்தர் ஓதுவார்
துணைப் பேராசிரியர் -
(அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்)

சிறப்பு இசையரங்கம்
பிரபல இளங்கலைஞர்கள்
சீர்காழி அருணா, அகிலா சகோதரிகள் (இந்தியா)

கவியரங்கம், பட்டிமண்டபம் நடைபெறும்
அனைவரையும் அழைக்கின்றோம்

நிர்வாக சபை- சிவபூமி அறக்கட்டளை, திருக்குறள் வளாகம், மாவிட்டபுரம்.
021 224 5525

(3284)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற நிலையில் யாழில் 33 புகையிரத கடவைகள்

## ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் 33 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காணப்படுவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டமானது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அரசாங்க அதிபர் ம.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், பிரதேச செயலக பிரிவுவாரியாக சாவகச்சேரியில் 14, நல்லூரில் 7, தெல்லிப்பழையில் 6, யாழ்ப்பாணத்தில் 3, உடுவிலில் 3 என 33 பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காணப்படுகின்றன.

எனவே இந்த புகையிரத கடவைகளை பாதுகாப்பாக அமைத்து தரவேண்டும் என தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர் மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8)






சிவபூமி அறக்கட்டளையால் அமைக்கப்பட்ட திருக்குறள் வளாகத் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தினமணிப் பத்திரிகையின் ஆசிரியர் கி.வைத்தியநாதன் பலாலி விமான நிலையத்தில் வைத்து வரவேற்பதனைப் படத்தில் காணலாம்.

# 38 பேருந்துகள் பற்றாக்குறையாக உள்ளது

## யாழ்.மாவட்ட அரச அதிபர்



(யாழ்ப்பாணம்).

யாழில் நேர அட்டவணைக்கு ஏற்ப செயற்பட 38 புதிய பேருந்துகள் தேவையாக உள்ளது என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் யாழ்.அரசாங்க அதிபர் ம.பிரதீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் யாழ். சாலைக்கு 23 பேருந்துகளும், பருத்தித்துறை சாலைக்கு 10 பேருந்துகளும் காரைநகர் சாலைக்கு 5 பேருந்துகளும் தேவையாக உள்ளன.

எனவே இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்தார். (6-8)

# நிறுத்தப்பட்ட புகையிரத சேவைகளை மீள ஆரம்பியுங்கள்

## ஆளுநர் ஜனாதிபதியிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட புகையிரத சேவைகள் சில நிறுத்தப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர் அதனை மீள ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு அரைகுறை நிலையிலுள்ள வீடுகளுக்காக நிதி ஒதுக்கீடு தேவை என ஜனாதிபதியிடம் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார். (6-8)

# ஜனாதிபதி வருகையினை முன்னிட்டு வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுரவின் யாழ். வருகையை முன்னிட்டு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ள வருகை தந்த வேளை, வேலையற்ற பட்டதாரிகள் மாவட்ட செயலகத்திற்கு அருகில் தமக்கு வேலைவாய்ப்பு கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு தடைவிதிக்க கோரி யாழ் நீதவான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்த நிலை யில் அமைதியாக போராட முடியும் என கூறி, போராட்டத்திற்கு தடை விதிக்க முடியாது என கூறிய மன்று தடை கோரிய மனுவை நேற்று முன்தினம் நிராகரித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## வீதி விபத்துக்களை குறைக்க

# மேலதிக வீதி சமிக்ஞைகள் அமைக்கப்பட வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு மேலதிகமான வீதி சமிக்ஞை விளக்குகளை அமைக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக யாழில் 6 வீதி சமிக்ஞை விளக்குகளே காணப்படுகின்றன. எனவே வீதி விபத்துக்களை குறைக்க வீதி சமிக்ஞைகளை அமைக்க வேண்டும்என இதன் போது தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்ற ஓல்ட்கோல்ட்ஸ் அணி



ஓல்ட்கோல்ட்ஸ் அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் 5ஆவது ஆண்டாக நடத்தி வரும் பாலகிருஸ்ணன் ரி-20 தொடரில் (2025) கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் ஓல்ட்கோல்ட்ஸ் அணி, ஸ்கந்தா ஸ்ரார் அணியை எதிர்த்து விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் அணியினர் 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றனர்.

கஜேந்திரன் ஆட்டமிழக்காது 34 பந்து களில் 49, கீதாவர்சன் 39 பந்துகளில் 24, நிலக்ஸன் 8 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

ஸ்கந்தா அணி சார்பாக அஜன்தன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3, தனுஸன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 2, தபீஸனன் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. தனுஸன் 29 பந்துகளில் 32, தபீஸனன் 9 பந்துகளில் 17, மிதுஸன் 19 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ட்ஸ் அணி சார்பாக நர்தானன் 24 ஓட்டங்களுக்கு 2, கஜேந்திரன் 39 ஓட்டங்களுக்கு 2, நிரோஸன் 14 ஓட்டங்களுக்கு 1 இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர்.

இப்போட்டியின் மூலம் ஓல்ட் கோல்ட்ஸ் அணி 4.04 புள்ளிகளையும், ஸ்கந்தா ஸ்ரார் அணி 1.94 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இப்போட்டி 2025 ஆம் ஆண் டில் யாழ். நகரில் நடைபெறும் 3 ஆவது போட்டியாகும். (6-8)

## வடக்குக்கு வரும்...

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கலந்துரையாடலின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதி வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்த நிலையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேள்வியை முன்வைத்திருந்தார்.

“மத்திய அரசால் வடக்கு மாகாணஅபிவிருத்திக்காகப் பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால் ஒதுக்கப்படும் நிதிகள் பலவும் செலவு செய்யப்படாமல்திருப்பி அனுப்பப்படும் நிலை காணப்படுகின்றது. இந்த மாகாணத்தில்பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இருந்த போதிலும் பல நிதிகள் திருப்பி அனுப்பப்படுகின்றன. வடக்குமாகாணத்தில் உள்ளக வீதிகளைப்புனரமைப்பதற்கு எவ்வளவு நிதிவேண்டும்? என்று ஜனாதிபதி இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரி விவரங்கள் தெரியாது தடுமாறிய நிலையில், ஜனாதிபதி மீண்டும், வீதிகளைப் புனரமைப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும் எனச் சரியாகக்கூறுங்கள், ஏறக்குறைய என்று கதைகூற வேண்டாம்.

நாடு பொருளாதார நெருக்கடிநிலையில் இருந்து இன்னும் மீளவில்லை. இங்கு பெற்றோல் இருக்கின்றது, காஸ் இருக்கின்றது என்றால் பொருளாதாரநெருக்கடி இல்லை என நினைக்கவேண்டாம்.நாங்கள் இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து கொண்டே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில்அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.ஆகவே, அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடுசெய்தால் அதனை உரிய முறையில்பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று கூறினார்.

மேலும் வடக்கில் உள்ள கிராமிய சிறு வீதிகள் புனரமைப்பிற்கு 5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## மக்களின் காணி...

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் நிலவி வரும் பிரச்சினை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும், காணிகளை உரியவர்களிடம் மீளக் கையளிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக நாட்டில் எங்கும் காணிகளை கையகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ள போதிலும், காணி வழங்கியவர்களிற்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வடமாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பரந்தன், மாங்குளம் மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் மூன்றுபுதிய கைத்தொழில்வலயங்கள்நிறுவப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்களுக்கு இந்தத் திட்டங்களில் முதலீடு செய்யுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கம் அதன் அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு மாகாணத்திற்கு முன்னுரிமை அளித்து, பிராந்தியத்திற்கான இலக்கு முன்முயற்சிகளை உறுதிசெய்து வருவதாக ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம-7)

## மரண அறிவித்தல்



### திருமதி அரசரத்தினம் அன்னபூரணம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரசரத்தினம் அன்னபூரணம் அவர்கள் 29.01.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் தர்மலிங்கம், கமலம், ஞானேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், தேவசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயதேவி, மதியானந்ததேவி, மணிவர்னன், சிறிதேவி, காலஞ்சென்ற கமலக்கண்ணன், திருமுருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வேந்திரம், நடனசபா, சீதாதேவி, விபுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(3286)

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 01 . 1955



மறைவு
31 . 01 . 2025

### இராசு தர்மகுலசிங்கம் (தறுமு - சமாதான நீதவான் )

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்
பனை, தென்னைவள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கம் – யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம்வீதியைப் பிறப்பிடமாகவும் றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று 31.01.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசு(JP) - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - விக்டோரியா தம்பதியரின் அன்பு மருமகனும் அனற்மேரி மெற்றில்டா அவர்களின் அன்புக் கணவரும் தனுஸ்யா(லண்டன்), பிரியங்கா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்மிலன்(லண்டன்), சலீஸ்ரன் (மருத்துவ விற்பனைப் பிரதிநிதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதிக்ஷா (லண்டன்), தக்ஷிதா(லண்டன்), ஆதிராசாய் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், விஜயகுமாரி, துரைராஜசிங்கம் மற்றும் தனபாலசிங்கம், இராஜகுமாரி, செல்வகுமாரி, ஞானகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதன், அனற்கிளறிங் (ஜேவதி) மற்றும் இராஜேந்திரம், சாந்தலிங்கம், அம்பிகாவதனி, றதனி, றெஜினோல்ட்(ஜெயசிலன் -ஜேர்மன்), அனற்வியாட்றிஸ்(கனடா), அனற்யூலியற்(ஜேயந்தி - டென்மார்க்), அனற்டொலிகிறேஸ்(டர்சினி - கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மருமகன் - 077 634 7028
மகன் - 077 828 1766

தகவல்:
குடும்பத்தினர்

(3296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடத்தப்படவுள்ளவர்களின் பட்டியலில் 3000 இலங்கையர்கள்

## அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கப் பிரிவு

(வோஷிங்டன்) —

**அமெரிக்காவினால் நாடு கடத்தப்படவுள்ளவர்களின் பட்டியலில் 3000 இலங்கையர்களும் உள்ளனர் என அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு தெரிவித்துள்ளது.**

2024 நவம்பர் 24 ஆம் திகதி வரை நாடு கடத்துவதற்கான இறுதி உத்தரவிற்காக காத்திருக்கும், இதுவரை தடுத்து வைக்கப்படாத இலங்கையர்களின் எண்ணிக்கை 3065 என அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்ட மற்றும் ஏனைய சவால்கள் காரணமாக அனைவரையும் உடனடியாக நாடு கடத்த முடியாது எனத் தெரிவித்துள்ள ஐசிஈ புகலிடக் கோரிக்கைகள் காரணமாகவும் வெளிநாட்டு அரசாங்கங்கள் ஒத்துழைக்காததன் காரணமாகவும் நாடு கடத்துவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து நாடுகளும் குடியுரிமை குறித்து ஆராய வேண்டும், பயண ஆவணங்களை வழங்க வேண்டும், நாடு கடத்தப்பட்ட சட்டவிரோத குடியேற்ற வாசிகளுடன் வரும் விமானங்களை ஏற்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நாடு கடத்தியவர்களுடன் வரும் விமானங்களை ஏற்க மறுக்கும் நாடுகளை அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு பட்டியலிட்டுள்ளது எனினும் இந்த பட்டியலில் இலங்கை இடம்பெறவில்லை. (நி-8)

# பேருந்தில் கசிப்பு கடத்திய நபரை மடக்கி பிடித்த பயணிகள்

(தருமபுரம்)

சூட்சுமமான முறையில் நேற்று பேருந்தில் கசிப்பு கடத்திய நபரை மடக்கி பிடித்து அவரை பயணிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து யாழ். நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் பயணப்பொதியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட கசிப்புப் பொதி உடைந்ததில் அதிலிருந்து துர்நாற்றம் வீசியது.

இதனையடுத்து பரந்தன் பகுதியில் பேருந்தினை நிறுத்தி சட்டவிரோதமான முறையில் கசிப்பினைக் கடத்த முயன்ற நபரினை பயணிகள் அப்பகுதியில் நின்ற வீதிப் போக்குவரத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரையும் மீட்கப்பட்ட கசிப்பினையும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கையகப்படுத்தினர். இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-316)


## வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
## படவரைஞராகப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2025
## காலநீடிப்பு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன் மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை / ஒழுங்கு விதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்காக 30.11.2024 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகையில் பிரசுரித்தமைக்கு மேலதிகமாக காலநீடிப்பு செய்யப்பட்டு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் புதிதாக பதிவு செய்பவர்களும் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு கல்வித் தகைமை Drafting Technology Civil - NVQ Level - 5 அல்லது Drafting Technology Civil - NVQ Level - 5 கற்கை நெறியினை தொடர்வதற்கான சிபாரிசு கடிதம் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு :-

| | |
|---|---|
| படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் படிவ கட்டணம் | - ரூபா 1,000.00 |
| படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | - ரூபா 3,000.00 |
| படவரைஞராக புதிதாக பதிவு செய்வதற்கான கட்டணம் | - ரூபா 5,000.00 |

**சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிதெற்கு பிரதேசசபை ,**
**சுன்னாகம்.**

(சி-2171)


# இராசிபலன்

01.02.2025
தை 19 சனிக்கிழமை
திருதியை பிற்பகல் 2.45 மணிவரை
சதயம் காலை 7.07 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 5.45 மணிவரை
சுபநேரம் 3.36-5.06மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம் - மகம்

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.


கடகம்

மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும் நாள்.


துலாம்

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


கும்பம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கும், உடல் நலனில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உங்களின் செயற்பாடுகளில் முன்னேற்றமுண்டு, எதிலும் அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கும் மேலோங்கும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, மருத்துவச் செலவுகள் குறையும் வாய்ப்புண்டு.


தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


மீனம்

குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

நூறு ஆசிரியர்களுக்குச் சமமான மனிதர் தந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களால் சிறுவர்களுக்கு ஆபத்து

## கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

**சமூக ஊடகங்களின் பயன்பாடுகளால் சிறுவர்கள் தவறான முடிவெடுப்பது அதிகரித்துள்ளதாக இலங்கை சிவில் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



கடந்த ஆண்டில் 200 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொண்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அதன் தலைவர் விசேட மருத்துவர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

இவை அனைத்திற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. சமூக ஊடகங்களைத் தடை செய்வதே இவற்றை தடுக்க எம்மால் இயன்ற முதலாவது செயற்பாடாகும். குழந்தைகளுக்காக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டும் உள்ளன.

இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்த பரிந்துரைகளை வழங்க எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார். (நி-8)

### உலக அழகிப்போட்டியில் இலங்கைக்கு இரண்டாமிடம்

(கொழும்பு)

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடைபெற்ற 40ஆவது திருமணமான உலக அழகிப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த இஷாதி அமந்தா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

மேலும், இம்முறை திருமணமான உலக அழகி கிரீடத்தை தென்னாபிரிக்காவைச் சேர்ந்த Tshego Gaelae வென்றுள்ளதுடன் தாய்லாந்தைச் சேர்ந்த Ploy Panperm மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார்.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற திருமணமான இலங்கை அழகிப் போட்டியில் இஷாதி அமந்தா முடிசூட்டப்பட்டதுடன் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இணையவழியில் கடவுச்சீட்டு

## நடைமுறைப்படுத்த அரசு தீவிரம்



(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக காரியாலயங்கள் ஊடாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் காலத்தை நீடிக்கும் நடவடிக்கைகளை இணையம் ஊடாக விரைவாக மேற்கொள்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் இணையம் ஊடாக விண்ணப் படிவத்தை குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்புவதும், விரல் அடையாளம் பெறுவதும் தூதரக காரியாலயங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

முதற்கட்ட நடவடிக்கையின் கீழ் 20 தூதரக காரியாலயங்களில் இணையம் ஊடாக விண்ணப்பிக்கும் நடைமுறை செயற்படுத்தப் படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஏனைய தூதரக காரியாலயங்களுக்கும் இந்த சேவை விரிவுபடுத்தப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச அமைப்புக்கும், துறைசார் அமைச்சரான விஜித ஹேரத்திற்கும் இடையிலான சந்திப்பின் போது இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. (நி-8)

# அதிகரிக்கும் காற்று மாசு முகக்கவசம் அணிவது நல்லது

## விசேட வைத்திய நிபுணர் ஆலோசனை



(கொழும்பு)

காற்று மாசு அதிகரித்துள்ளமையால் நாட்பட்ட சுவாச நோயாளர்கள், நோயிலிருந்து பாதுகாப்பு பெற முகக்கவசங்களை அணியுமாறு கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் காற்று மாசு அதிகரித்துள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இதனால் சிறுவர்களிடையே சுகாதாரப் பிரச்சினைகளும் உயர்வடைந்துள்ளன.

விசேடமாக மூச்சுத்திணறல், இருமல், ஆஸ்துமா மற்றும் சுவாச நோய் சார்ந்த வைரஸ் பரவலும் அதிகரித்துள்ளது.

நாட்பட்ட சுவாச நோயாளர்களுக்கும் நோய் நிலைமை தீவிரமடையலாம். ஆகையால் அனைவரும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

நாட்பட்ட சுவாச நோயாளர்கள் மற்றும் ஆஸ்துமா நோயாளர்கள் நோயிலிருந்து பாதுகாப்புப் பெற முகக் கவசங்களை அணிவது நல்லது.

தொடர்ச்சியான இருமல் மற்றும் மூச்சுத்திணறல் உள்ளவர்கள் எவரேனும் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது.

அத்தோடு இன்புளுவென்சா, சிக்கன் குனியா போன்ற வைரஸ் தொற்றுகளும் சமூகத்தில் வெகுவாக பரவி வருகிறது.

பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள இக்காலத்தில் சிறுவர்கள் பல மணி நேரமாக வெளியிடங்களில் நடமாடுவதும் அதிகரித்துள்ளது. மேலும் வைரஸ் பரவல் காரணமாக நியூமோனியா ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. நீண்ட காலம் மாசடைந்த வளியை சுவாசிப்பது நுரையீரல் புற்றுநோய்க்கு வழிவகுக்கும். இவ்வாறான சூழ்நிலைகளின் போது உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் எனத் தெரிவித்தார். (நி-8)

# ஜனாதிபதியின் செயலாளரை சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள்



(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

அதன்படி இந்நாட்டில் சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்காக திட்டமிட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

மேலும் புதிய சுற்றுலா வலயங்களை நிறுவுதல் மற்றும் சுற்றுலாத்துறையின் எதிர்கால திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான அரச நிறுவனங்களின் பங்களிப்புக் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினால் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து திருப்தியடைவதாகவும் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுப்பாவனையால் நாளொன்றுக்கு 40-50 பேர் வரை உயிரிழப்பு!

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் இருதய நோய்கள், புற்றுநோய் மற்றும் சுவாச நோய்கள் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு 83 வீத மதுபானம் மற்றும் புகையிலைப் பாவனை காரணமாக இருப்பதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

2022 ஆம் ஆண்டு மேற் கொள் ளப்பட்ட ஆய்வொன்றில், மதுபானத் தினால் இலங்கைக்கு 165.2 பில்லி யன் வருமானம் கிடைத்துள்ள போதி லும் 237 பில்லியன் செலவு ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மதுபான பாவனையால் நாளொன்றுக்கு 40 - 50 பேர் வரை உயிரிழப்ப தாகவும் இந்தத் தொகை வருடத்திற்கு 15,000 - 20,000 எனவும் கூறப்படுகின்றது.

இதனால் இலங்கையில் பல குழந்தைகள் தந்தையை இழந்து வாழ்வ தாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை ஒன்று கூடும் இடங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் மதுபாவனை அதிகரித்திருப்பதால் சமூகக் குடிப்பழக்கம் அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இலங்கையர்கள் நாளொன்றுக்கு 510 மில்லியன் ரூபாய்களை மது பாவனைக்காக செலவழித்து வந்ததாகவும் இந்தத் தொகை தற்போது அதிகரித்திருப்பதாகவும் மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையத்தின் நிர்வாக இயக்குநர், சம்பத்டிசேரம் தெரிவித்துள்ளார். (நி-8)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

559

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

Western Union, MoneyGram, Ria ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கிபா-22 1/2
உயரம்: 5' 11"
தகைமை/தொழில்: MSc, Operation Analyst(London)
எதிர்பார்ப்பு: பட்டதாரி(London Only)
தொ.இ: B/15109

பிறப்பு:1985 - இந்து
நட்சத்திரம்: விசாகம் 5 இல் சூரி செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L, மின் இணைப்பாளர்
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/15111

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: பரணி
கிபா: 12 3/4
உயரம் : 6'
தகைமை/தொழில்: BSc, Civil Engineer (pvt)
எதிர்பார்ப்பு : BSC(IT) பட்டதாரி
தொ.இ: B/15112

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996- இந்து
நட்சத்திரம்: சதயம்
கிபா-25
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: Bcom, IT(PVT)
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/15110

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா-52 7 இல் செவ்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:HR Management
எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் ஆண்
தொ.இ: G/15113

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்:5' 3"
தகைமை/தொழில்:HND IT, Accountant(pvt)
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ: G/15116

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

உ
குஹமயம்

# ஆசார்யாபிஷேக அழைப்பிதழ்

யாதினுமினியீர்!


நிகழும் குரோதி வருடம் தை மாதம் 21ஆம் நாள் 03.02.2025 திங்கட்கிழமை காலை நாழி 7.47 விநாழி முதல் நாழி 10.44 வரையுள்ள காலை 09:30 மணிக்கும் காலை 10:30 மணிக்குமிடையில் வரும் ரேவதி நட்சத்திரமும் மீன லக்கினமும் கூடும் சித்தயோக சுபமுகூர்த்த வேளையில்,

**எமது சிரேஷ்ட குமாரனும், மாவை ஆதீன இளவரசுமான**

## ஞானஸ்கந்த சர்மாவிற்கு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபத்தில் எம்பெருமான் கந்தசுவாமியார் முன்னிலையில், சிவாச்சாரியார், சான்றோர், சைவ அடியார்கள் சகிதம் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்க அனுக்கிரகம் பெற்றுள்ளேன். வர்ணாச்சிரம தர்ம எல்லைக்குள் வாழும் அந்தணப் பெருந்தகைகளை ஆதரித்து அவர்தம் கடமைகளில் ஆழ்ந்த சிரத்தைகள் எடுப்பதற்கு ஆற்றுப்படுத்தும் பெருந்தொண்டு சைவப் பெருமக்களது கடமையாகும். ஆகவே ஆசார்யாபிஷேகம் பெற்று எம்பெருமானின் தொண்டுகளிலும், சைவ மக்களது சமய ரீதியான தொண்டுகளிலும் ஈடுபடுத்துமுகமாக நடாத்தப்படும் இவ் வைபவத்தில் அனைவரும் குடும்ப சமேதராக வருகைதந்து இது உங்கள் விழாவாக ஏற்று எம்மையெல்லாம் மகிழ்வித்து, மாவை ஆதீன பரம்பரை தடைகளேதுமின்றி நன்றாக வாழ வேண்டுமென வாழ்த்தியும், அதற்கெல்லாம் திக்கெட்டும் நல்லருள் புரியும் மாவைக்கந்தசுவாமியாரது திருவருள் அபரிமிதமாகச் சொரிய வேண்டுமென விழாவின்போது பிரார்த்திக்குமாறு மிகுந்த அன்புடன் அழைக்கின்றோம். தொடர்ந்து நடைபெறும் விருந்து உபசார போஜனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 02.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | பூர்வாங்கம் |
| 03.02.2025 | திங்கட்கிழமை | காலை 09:30 முதல் 10:30 வரை | ஆச்சார்யாபிஷேகம் |
| | | காலை 10:45 | அறிஞர்களது வாழ்த்துரை, ஊர்வலம் |
| | | நண்பகல் 12:30 | உச்சிக்காலப்பூசை |
| | | | விருந்து உபசாரம் மதிய போஜனம் |



**இவ்வழைப்பிதழைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் குடும்பசகிதமாக வருகைதரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

சுபமஸ்து

கலியுகம் 5126
மாவை ஆதீனப் பேரரசு,
மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

இங்ஙனம்
தங்களது வருகையை எதிர்பார்க்கும்
மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
குடும்பத்தினர்

(C-2170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### எடுத்த பணம் உங்களுக்கே!

## சீனாவில் புதுமையான முறையில் கொடுப்பனவுகள் வழங்கி ஊக்குவிப்பு



(பீஜிங்)

சீன கிரேன் நிறுவனம் ஒன்று தனது ஊழியர்களுக்கு ஆண்டு இறுதி ஊக்குவிப்பு பணமாக 11 மில்லியன் டொலர்களை, வழங்கியுள்ளது.

இது இலங்கை ரூபாயில் 70 கோடிக்கும் அதிகமான தொகையாகும். எனினும் இந்த ஊக்குவிப்புப் பணத்தை வழங்கும் போது குறித்த நிறுவனம் 15 நிமிடங்கள் என்ற கால வரையறையை வழங்கி, அதற்குள் ஒருவர் எண்ணக் கூடிய அளவான பணத்தை அவர் வீட்டிற்கு எடுத்துச் செல்லாம் என்ற நிபந்தனையை விதித்ததாக கூறப்படுகிறது.

இதன்படி, ஹெனான் மைனிங் கிரேன் கோ. லிமிடெட்டில், பணம் மேசையில் வைக்கப்பட்டது.

இதனையடுத்து, ஊழியர்கள் தம்மால் 15 நிமிடங்களுக்குள் எண்ணக்கூடிய பணத்தை எடுத்துக்கொள்வதை காட்டும் காணொளிக்காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இதன்போது, அதிகமாக ஒரு ஊழியர் ஒரு இலட்சம் யுவான்களை எண்ணி முடித்து வீட்டுக்கு எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கை ரூபாயில் 12.07 இலட்சமாகும். (நி-8)

# ட்ரோன் தாக்

# அதிரும் உ

(கீவ்)

**உக்ரைனின் பல பகுதிகள் மீது இரவிரவாக பாரியளவில் ஆளில்லா விமானங்களைக் ெ தாக்குதல் நடத்தியுள்ளதாக தக தெரிவிக்கின்றன.**

இதன்படி உக்ரைனின் பெரிய நகரமான சுமியில் ரஷ்யா ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் அப்பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பு சேதம் அடைந்தது. இந்தத் தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். இதனால் அந்தக் குடியிருப்பில் வசித்திருந்த 120 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

அதேபோல் உக்ரைனின் தெற்கு ஒடேசா பகுதியில், ஒரு மருத்துவமனை மற்றும் இரண்டு அடுக்குமாடிக் கட்டடங்களை ட்ரோன்கள் சேதப்படுத்தியதாக பிராந்தியத் தலைவர் ஓலே கிப்பர் டெலிகிராமில் தெரிவித்துள்ளார். எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அவர்

## 1.20 லட்சம் உடும்புகளை அழிக்க தாய்வான் திட்டம்



(தைபே)

தாய்வானில் உள்ள உடும்புகளில் 60 சதவீதத்தை அழிக்க அந் நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி அந்த நாட்டின் வனத்துறை கணக்கிட்டின் படி 2 லட்சம் உடும்புகளில் இருந்து 1.20 லட்சம் உடும்புகள் அழிக்கப்படவுள்ளன.

இதற்காக வேட்டைக்காரர்கள் நியமிக்கப்பட்டு ஒரு உடும்புக்கு 15 அமெரிக்க டொலர் சன்மானமாக வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசியாவில் தீவு நாடாக தாய்வான் உள்ளது. மிக சிறிய தீவு நாடான தாய்வானில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் விவசாயத் தொழிலை மேம்படுத்தும் முயற்சியில் அந்த நாடு ஈடுபட்டு வருகிறது.

இந்தநிலையில் நாட்டில் உடும்புகள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்ததால் விளை நிலங்களுக்குள் புகுந்து அவற்றை அவை சேதப்படுத்தி வந்தது. இதனால் அந்த நாட்டின் விவசாயிகள் கடும் பாதிப்படைந்துள்ளதால் அந் நாட்டு அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது. (நி)

## அமெரிக்காவிற்கு வருகை தருமாறு நெதன்யாகுவுக்கு அழைப்பு விடுத்த ட்ரம்

(ஜெருசலேம்)

ஜெருசலேம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தங்கள் நாட்டிற்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப், கடந்த இருவாரங்களுக்கு முன்பு முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். அதற்கு முன்பாக, தான் ஜனாதிபதியாக இருந்தால், உலகில் போர் நடக்கவிடமாட்டேன் என்று கூறியிருந்தார்.

அவர் பலமுறை வெளியிட்ட எச்சரிக்கையாலும், பிற நாடுகள் முயற்சியாலும், காசாவில் நிகழ்ந்து வந்த இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர், அவர் பதவி யேற்புக்கு முன தாகவே முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், பெப்ர மாதம் 4 ஆம் திகதி தங் நாட்டிற்கு வருமாறு இஸ் பிரதமர் பெஞ்சமின் நெதன் குவுக்கு அமெரிக்க ஜனாதி ட்ரம்ப் அழைப்பு விடுத்து தாக இஸ்ரேல் பிரதமர் அ லகம் தெரிவித்துள்ளது. ஜ

## பிரிக்ஸ் நாடுகளுக்கு ட்ரம்ப் மீண்டும் மிரட்டல்

(வோஷிங்டன்)

அமெரிக்க டொலருக்கு போட்டியாக தனி கரன்சியை உருவாக்க மாட்டோம் என்று பிரிக்ஸ் நாடுகள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் இல்லை என்றால் 100% வரி விதிப்பை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இணைந்து பிரிக்ஸ் கூட்டமைப்பை தோற்றுவித்துள்ளன. இதில் புதிய நாடுகள் சிலவும் சமீபத்தில் இணைந்துள்ளன. பிரிக்ஸ் கூட்டமைப்பு தொடங்கப்பட்டபோது, இந்த நாடுகளுக்கென பிரத்யேக கரன்சி உருவாக்கப்படும் என்ற திட்டமும் அறிவிக்கப்பட்டது. அதில் சர்வதேச வர்த்தகத்தில் டொலருக்கு பதிலாக பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பை செயல்படுத்தமாட்டோம் என்றும் பிரிக்ஸ் நாடுகள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் ஜனாதிப்தி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தகத்துக்கு அமெரிக்க டொலரை பயன்ப துவதில் இருந்து விலக செல்ல முயற்சிக்கும் பிரிக் நாடுகளின் யோசனை நாம் வேடிக்கை பார்த்த கா முடிந்து விட்டது.

இந்த நாடுகளிடம் உறுதி மொழியை நாங் கோரப் போகிறோம். அவை வன; ஒரு புதிய பிரிக்ஸ் க சியை உருவாக்க மாட்டே என்றும், வலிமை மி அமெரிக்க டொலருக்குப் பதி வேறு எந்த நாணயத்தை ஆதரிக்கமாட்டோம் என் உறுதியளிக்க வேண் இல்லையெனில், அ 100% வரிகளை எதிர்கொ வேண்டியிருக்கும்.

மேலும் அற்புதமான அ ரிக்க பொருளாதாரத்தில் கள் உற்பத்திப் பொருட்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...க்குதல்களால் ... உக்ரைன்!

...ாக ரஷ்யா
...க் கொண்டு
...கவல்கள்

தெரிவித்தார்.

மேலும் இரவு நேரங்களில் ரஷ்யா ஏவிய 80 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை உக்ரைன் இராணுவம் சுட்டு வீழ்த்தியது..

ரஷ்யா உக்ரைனில் இரவு முழுவதும் 80இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது, இவை பொதுவான இரவு நேரத் தாக்குதல்கள். இவற்றில் பெரும்பாலான ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



## வெள்ளத்தில் மிதக்கும் மலேசியா



(கோலாலம்பூர்)

மலேசியாவில் பெய்து வரும் தொடர் கனமழையின்காரணமாக பெரும்வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள் ளது.

மலேசியாவில் கடந்த சில தினங்களாக வரலாறு காணாத அளவில் மழை பெய்து வருகிறது. குறிப்பாக, பார்னேவில் பெய்யும் தொடர் கனமழை காரணமாக, குடியிருப்புகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகள ஏற்பட்டுள்ளன. நேற்று முன்தினம் வரையில் இந்த கனமழையில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

எல்.என்.ஜி எனப்படும் இயற்கை எரிவாயு மையம் அமைந்திருக்கும் சாபா மற்றும் சரவாக் பகுதிகளில் மட்டும் 700 மி.மீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதாக அரசு கொடுத்த தரவுகளில் தெரியவந்துள்ளது. அதேபோல, அண்மையில் பின்டுலுவில் 48 மணி நேரத்தில் 800 மி.மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

மேலும், இந்த கனமழை நீடிக்கும் என்று மலேசிய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-8)

## ...று ...ம்ப்

...திபதியாக பொறுப்பேற்ற பிறகு, வெளிநாட்டு தலைவருக்கு ட்ரம்ப் விடுத்த முதல் அழைப்பு இதுவாகும்.

காசாவில் இருக்கும் பாலஸ்தீனியர்களை எகிப்து மற்றும் ஜோர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் அறிவுறுத்தியிருந்தார். அவரது இந்தப் பேச்சுக்கு எகிப்து, ஜோர்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை ட்ரம்ப் சந்திக்க இருக்கின்றமை சுட்டிக் காட்டத்தக்கது. (நி-8)

...விற்பனை செய்யும் வாய்ப்பையும் இழக்க வேண்டி இருக்கும்.

அவை வேறு எந்த முட்டாள் நாட்டையும் தேடிச் செல்லலாம். அமெரிக்க டொலருக்குப் பதிலாக வேறு எந்த கரன்சியும் வருவ தற்கு வாய்ப்பு இல்லை. அப்படி முயற்சிக்கும் எந்த நாடும் வரிகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கை, பிரிக்ஸ் நாடுகளுக்கு நேரடியாக விடப்பட்டுள்ள மிரட்டல் என்று கருதப்படுகிறது. இதே போன்றதொரு அறிக்கையை பதவியேற்பதற்கு சில வாரங்களுக்கு முன்பும் அவர் வெளியிட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான விமானம்

## அனைத்துப் பயணிகளும் உயிரிழந்துள்ளதாக அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க பயணிகள் விமானம் ஒன்று உலங்கு வானூர்தி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணித்த அனைவரும் உயிரிழந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணத்திலிருந்து 67 பேருடன் பயணித்த குறித்த விமானம் அந்த நாட்டு இராணுவ உலங்கு வானூர்தி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து குறித்த விமானம் மற்றும் உலங்கு வானூர்தி ஆகியன, பொட்டோமெக் ஆற்றில் வீழ்ந்துள்ளன.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் காலை அமெரிக்காவின் ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் விமானம் தரையிரங்குவதற்கு தயாரான போது இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானத்தில் 60 பயணிகள் மற்றும் 4 பணியாளர்கள் பயணித்ததுடன், உலங்கு வானூர்தியில் 3 இராணுவ உத்தியோகத்தர்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், விபத்துக்குள்ளான விமானம் மற்றும் உலங்கு வானூர்தியில் பயணித்த அனைவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவில் நடந்த மிக மோசமான விமான விபத்து இதுவாகுமென, சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த விமானம் மற்றும் உலங்கு வானூர்தி ஆகியன வழமையான விமான விதிமுறைகளைப் பின்பற்றி வந்ததாகவும், தகவல் தொடர்புகளில் எந்தக் கோளாறும் ஏற்படவில்லை எனவும், அமெரிக்க போக்குவரத்துச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 30 நாட்களுக்குள் முதற்கட்ட அறிக்கையை வெளியிடுவதாகவும் தரவுகளை பதிவு செய்யும் கறுப்புப் பெட்டிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தேசிய போக்குவரத்து பாதுகாப்புச் சபையின் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜிஷனாவின் சதுரங்க பயணம் தொடர்பாக...



யாழ். மாவட்டத்தில் இணுவில் கிராமத்தில் வசித்து வரும் கஜிஷனா கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி கற்று வருகின்றார்.

இவர் சதுரங்கப் போட்டிகளில் வலயம், மாகாணம், தேசியம் கடந்து சர்வதேச ரீதியில் சாதித்து வருகின்றார். மேலும் எமது நாட்டில் மூன்று வகையான சதுரங்க வகைகளில் 7 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் ரேட்டிங் வைத்திருப்பது மட்டும் அன்றி முதல் நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த டிசம்பர் மாதம் 7 வயதிற்குட்பட்டவர்களுக்கான Rapid சதுரங்க தரப்படுத்தலில் உலக அளவில் 2 ஆம் இடத்தில் காணப்பட்டார். மேலும் 8 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் Fide Online Arena இனால் வழங்கப்படும் ACM மற்றும் AFM எனப்படும் பட்டத்தைப் பெற்றிருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் பாடசாலைகள் பள்ளி சதுரங்க அமைப்பினால் (SLSCA) நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் 7 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் வலய, மாகாண, தேசியம் என அனைத்து ரீதியிலும் முதலிடம் பெற்று எமது நாட்டின் உத்தியோகபூர்வ வீரராக தாய்லாந்தில் இடம்பெற்ற ஆசியா சதுரங்க இறுதிப் போட்டியில் பங்குபற்றி எமது நாடு சார்பாக பங்கு பற்றிய வீரர்களில் இரண்டு வகையான சதுரங்க போட்டியில் மிகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியது மட்டும் அன்றி இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற இளையோர்களுக்கான சதுரங்க போட்டியில் சூப்பர் 10இல் இடம்பிடித்து பின்பு தேசியரீதியில் இடம்பெற்ற சூப்பர் 10 போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை (2ஆம் இடத்தை) பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2024 ஆம் ஆண்டில் அனைத்து வகையான சதுரங்கப் போட்டியிலும் தேசிய ரீதியில் சம்பியன் பட்டம் மற்றும் சூப்பர் 10 இல் இரண்டாம் இடம் பெற்ற ஒரே ஒரு தமிழ் போட்டியாளர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) இவர் ஆவார். மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 4 சர்வதேச போட்டிகளில் 2025 ஆம் ஆண்டில் எமது நாடு சார்பாக பங்குபற்ற இருப்பது குறிப்பிடத்தக்கது.



வவுனியா சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதித் தேவையினைக் கருதி வவுனியா தலைமைப் பொலிஸ்நிலையத்தில் கடந்த புதன்கிழமை இரத்ததானமுகாம் நடைபெற்றது.
(படம்:-வசந்தரூபன்)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலை பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற் பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை மனவளக் கலை பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணன் வழங்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# இன்று ஒரு தகவல் 313



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## மெய்ப்பொருள் காண்பது அறிவு!

தந்தியைவிட வேகமாகப் போகக்கூடியது எது? என்று கேட்டார் ஒருவர். வதந்தி என்றார் இன்னொருதர். அவர் அப்படிச் சொன்னதிலே ஒன்றும் தவறு இல்லை. வதந்தி வேகமாகப் பரவுவதற்கு காரணம் என்ன?ஒன்றுக்கு இரண்டாக மிகைப்படுத்திச் சொல்லும் மனித சுபாவம் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம்.

**எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்றார் வள்ளுவர். யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடாதே? அறிவு வேலை செய்ய வேண்டும்! அதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.முக்கியமான பொறுப்பிலே உள்ளவர்களுக்கு இது மிகவும் முக்கியமான ஒரு தகுதி.

ஒரு நாட்டிலே ஒரு சாதாரண ஆள் ஒருவர் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. மிகவும் பிரியமாக வளர்த்தான். அவனுக்கு அது மிகவும் நெருக்கமான நண்பன். வேறு மனிதர்கள் யாரும் கிடைக்கவில்லை போல இருக்கிறது அவனுக்கு. அந்தக் கழுதைக்கு கந்தர்வசேனன் என்று பெயர் வைத்தான். அந்தப் பெயரை சொல்லித்தான் அதை அவன் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்த்த அந்தக் கழுதை ஒரு நாள் திடீரென்று இறந்து போனது. எப்படி இருக்கும் அவனுக்கு. மிகவும் சங்கடப்பட்டான். சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. முகத்தை உம் என்று வைத்துக்கொண்டு மிகவும் கவலையோடு இருந்தான். அந்த நேரம் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்ட ஒருத்தன் அந்தப் பக்கமாக வந்தான். அவனைப் பார்த்தான். ஏனப்பா இப்படி உட்கார்ந்திருக்கிறாய் என்று கேட்டான். கந்தர்வசேனன் இறந்துவிட்டதாகச் சொல்லி குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டார் அந்த ஆள். கந்தர்வசேனன் யார் என்று கேட்டான் இவன். இவன் இப்படிக் கேட்டவுடனே அவன் சத்தம் போட்டு அழ ஆரம்பித்துவிட்டான். அவன் அழும் வேகத்தைப் பார்த்ததும் சரி கந்தர்வசேனன் முக்கியமான ஒரு பெரிய மனிதன் போல இருக்கிறது என்று முடிவு செய்துவிட்டான். நமது நண்பனுடைய துக்கத்தை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான். உடனே தலையை மொட்டை அடித்து, மீசையை எடுத்தான், கறுப்பு உடையை அணிந்து கொண்டான்.

கந்தர்வசேனன் இறந்த செய்தி காற்றுவாக்கிலே பரவ ஆரம்பித்தது! ஊரிலே உள்ளவர்களெல்லாம் இந்தச் செய்தியை கேட்டதும் அவர்களும் தலையை மொட்டை அடித்து கறுப்பு துணியை கட்டினார்கள். ஒரே நாளிலே நகரம் முழுவதும் துக்கத்திலே ஆழ்ந்து போனது. எங்கே பார்த்தாலும் மொட்டைத் தலை, கறுப்புத் துணி. அந்த நாட்டு அமைச்சர் இதைப் பார்த்தார். மக்கள் எல்லாம் வருத்தமாக இருக்கிறார்களே என நினைத்து சில பேரைக் கூப்பிட்டு விசாரித்தார் என்ன விடயம் என்று. கந்தர்வசேனன் இறந்துவிட்டார்! அதுதான் இப்படித் துக்கம் அனுஷ்டிக்கிறோம் என்றார்.

அவராவது கொஞ்சம் யோசிக்கவேண்டுமல்லவா? கந்தர்வசேனன் என்று சொல்கிறீர்களே அவர் யார் என்று விசாரிக்கலாமே! ஆனால் அவர் விசாரிக்கவில்லை. மக்கள் துயரத்திலே நாமும் பங்கெடுத்துகொள்ள வேண்டும் என்று தான் நினைத்தார். அவரும் மொட்டை அடித்து துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டார். அமைச்சர் இப்படி இருக்கிறார் என்ற செய்தி அரசனுக்கும் எட்டியது. அவரும் மொட்டை அடித்து துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டார்.

அன்றைக்கு இரவு ராஜா மொட்டைத் தலையோடு அந்தப்புரத்துக்கு வந்தார். முகத்தை உம் என்று வைத்துக்கொண்டு. ராணி பார்த்தார். என்ன இது என்ன விடயம்? உங்கள் துக்கத்திற்கு என்ன காரணம்? என்று கேட்டார். ராஜா மிகவும் கவலையோடு கந்தர்வசேனன் இறந்துவிட்டாராம் மக்கள் எல்லாம் வருத்தத்திலே இருக்கிறார்கள். அதனாலே நானும் அவர்களுடைய துக்கதிலே பங்கெடுத்துக் கொள்கிறேன்! ஒரு ராஜாவினுடைய கடைமை இல்லையா அது? என்றார்.

அது சரி! கந்தர்வசேனன் யார்? உங்கள் அப்பாவா? அண்ணாவா? எதற்காகத் தலையை மொட்டை அடித்தீர்கள் என்று கேட்டார் ராணி. அதன் பின்பு தான் அரசன் யோசிக்க ஆரம்பித்தார். ஆமாம் அதுவும் சரிதான் என்று நினைத்து அமைச்சரைக் கூப்பிட்டு விசாரித்தார். அவரும் அதன் பின்பு தான் யோசிக்க ஆரம்பித்தார் மக்களைக் கூப்பிட்டு விசாரிக்க ஆரம்பித்தார். ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டே கடைசியாக அந்த ஆளிடம் போய் சேர்ந்தார்கள். கந்தர்வசேனன் யார்? என்று கேட்டார். என்னுடைய கழுதை தான் என்றான் அவன். ராஜாவும் மந்திரியும் தலையைத் தொங்கப்போட்டார்கள். எல்லோரும் சொல்வதையும் கண்ணை மூடிக்கொண்டு நம்ப ஆரம்பித்தால் கதை இப்படித் தான் போய் முடியும்.

ஸ்ரீ சிவானந்தர் சொன்ன குட்டிக் கதை இது. இந்தக் காலத்தில் எல்லாம் சில போர் சொல்கின்ற விடயம் கப்ஸா( கற்பனையினைப் புனைந்து மெய் போல பேசுதல்) மாதிரி இருக்கும். ரீல் விடுகின்றான் என்று நினைப்போம் ஆனால் அதிலும் உண்மை இருக்கும். ஒருவர் அப்படித் தான் என்னிடம் வந்தார். சேர் பத்துப் பேர் ஒரே குடையிலே வந்தோம் சேர் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட யார் மீதும் படவில்லை என்றான். அது எப்படி என்றேன். ஏன் என்றால் அப்போது மழையே பெய்யவில்லையே என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கிலம் ஆகிய இரு குறுகிய கால கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பிக்க முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (6-8)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் சிசுக்கள் சிகிச்சைப் பிரிவு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

10 மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாணத்தில் முதன்முறையாகத் தாயும் சிசுவும் ஒன்றாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் குறித்த சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (6-8)

# கொண்டலடி விநாயகர் கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு இறை மூத்த நைனார் (கொண்டலடி விநாயகர்) ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் மஹோற்சவங்கள் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி மாலை 10 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க வைபவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலை நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறைச்சாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில் தன்னார்வலர்களை கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# முன்பள்ளிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு

(சாவகச்சேரி)

இலங்கைக் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக் கிழமை வவுனியாவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முன்பள்ளிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் வவுனியா மாவட்ட செயலக கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

குறித்த செயலமர்வில் பேராசிரியர் அற்புதராசா, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.வீரசிங்கம்; பிரதிக் கல்விப் பணிப்பாளர் போல் அமல்ராஜ், முன்பள்ளி ஆசிரியர்கள் சங்க பருத்தித்துறைக் கோட்டத் தலைவர் ச.பத்மலோஜினி, வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் சிவரஞ்சினி, இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத் தலைவர் பரந்தாமன் புலவன், சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன், வவுனியா தெற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் தாட்சாயினி, வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளிதரன், வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ற.அஸ்லம் மற்றும் கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் ந.சச்சிதானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளனர். (6-8-30)

# வீதியால் சென்றவர்களை தாக்கி பணம் அபகரிப்பு

(குருமன்காடு)

வவுனியா கற்குழி பகுதியில் இளைஞர் குழு வீதியால் சென்றவர்களை வழிமறித்து வாள், பொல்லுகளால் தாக்கி அவர்களிடம் பணம் பறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மகாவித்தியாலயம் முன்பாகவுள்ள வீதி மற்றும் கற்குழி செல்லும் வீதி என்பவற்றில் குறித்த இளைஞர் குழு மது போதையில் வீதியால் சென்றவர்களை வழிமறித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்திப் பணம் பறித்துள்ளனர்.

இதன்போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு எடுத்து அறிவித்த போதும் பொலிஸார் வரவில்லை எனவும் தாம் தாக்குதல் மேற்கொண்டவர்களிடம் இருந்து தப்பிச் சென்று விட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (6-8-250)

# ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் அறிமுகம்



(சாவகச்சேரி)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் கடந்த திங்கட்கிழமை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்களின் "pledge to Restore Foundation" அமைப்பின் நிதிப் பங்களிப்பில் மேற்படி நவீன உபகரணம் தயாரிக்கப்பட்டு பனை ஆராய்ச்சி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.


இக் கண்டுபிடிப்பு தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

நவீன உபகரணத்தின் உதவியோடு அற்ககோல் அற்ற பதனீரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சிறந்த வருமானத்தை ஈட்ட முடியும். இந்தப் பதனீரானது உற்பத்தியின் போதே ஐஸ் ஜெல் ஊடாக குளிரூட்டப்படக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பனம் தொழிற்துறையைப் பொறுத்தவரை இவ்வாறான முயற்சிகள் மிகக் குறைவு. இந்த முயற்சி நிச்சயமாக வெற்றியளிக்கும். இவர்களுடைய முயற்சிக்கு பனை ஆராய்ச்சி நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கும் என தெரிவித்திருந்தார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நவீன ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரண அறிமுக நிகழ்வில் பனை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த அன்ரனி ராஜ் மற்றும் பொறியியலாளர் டிரோன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-230)

# மறைந்த நாடகப் பேராளுமை சண்முகலிங்கத்தின் நினைவரங்கு



(யாழ்ப்பாணம்)

தேசியக் கலை இலக்கியப் பேரவை மற்றும் தாயகம் கலை இலக்கியச் சஞ்சிகையின் ஏற்பாட்டில் மறைந்த நாடகப் பேராளுமை அமரர் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் அஞ்சலி நிகழ்வும் நினைவரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அஞ்சலி உரைகளைத் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம், தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சோ.தேவராஜா, செயல் திறன் அரங்க இயக்க இயக்குநர் தே.தேவானந், பேராசிரியர் க.ஸ்ரீகணேசன், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் க.இ.கமலநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதிதரன், நாடக ஆற்றுகையாளர் ச.நித்திகா, யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் து.இளங்குமரன் மற்றும் நாடக ஆற்றுகையாளர் க.சீலன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-8)

## புகையிரதம் மோதி பொலிஸ் ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியாவில் புகையிரதம் மோதிப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளதாக ஈரப்பெரிய குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா, அவுசதப்பிட்டிய பகுதியில் புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியான 44 வயதுடைய போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ள நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் ஈரப்பெரிய குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025



**மேஷம்:**

கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் (வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன் - லாப ஸ்தானத்தில் சனி - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று தன, வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சூரியன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02. 2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத் தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் எடுத்த வேலையை சரியான நேரத்தில் செய்து பெயர் வாங்குபவர்கள். இந்த மாதம் இராசிநாதன் செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்தில் வக்கிர நிலையில் இருந் தாலும் குரு சஞ்சாரம் பெற்றிருப்பதால் எல்லாக் காரியங்களும் அனுகூல மாகும். முக்கிய நபர்களின் சந்திப்பும் அவர்களால் உதவியும் கிடைக்கும். உங்கள் வாக்கின் மூலம் அனைத்து காரியங்களையும் சாதித்துக் கொள்வீர் கள். உடல் ஆரோக்கியம் பெறும். மன தில் தைரியம் கூடும். தன்னம்பிக்கை உண்டாகும். எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் எதிர்பாராத திருப் பங்கள் ஏற்படும்.

தொழில் ஸ்தானாதிபதி சனி லாப ஸ்தானத்தில் இருப்பதின் மூலம் பலம் பெற்றிருக்கிறார். தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புகள் எதிரில் வந்து தோன்றும். வியாபாரம் தொடர்பான செலவு கூடும். உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக் கலாம். செயற்றிறன் அதிகரிக்கும். சக பணியாளர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பாதிபதி சுக்கிரன் உச்சம் பெற்றி ருக்கிறார். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பிரிந்து சென்ற குடும்ப

## மனதில் தைரியம் கூடும்!

உறுப்பினர் மீண்டும் வந்து சேரலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் மரியாதை கூடும். சுக்கிரனின் சார பலத்தால் தாய் தந்தைய ருடன் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும்.

பெண்களுக்கு எதிர்பாராத சந்திப்பு கள் உண்டாகும். திடீர் செலவு உண் டாகும். முக்கிய பொறுப்புகள் கிடைக் கக்கூடும். முக்கியஸ்தர்களின் ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினர் கூடுத லாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது வேலையைக் கண்டு சக கலைஞர்கள் பொறாமை கொள்வார்கள். கடன் பிரச்சினை தீரும். செல்வநிலை உயரும். இறுக்கமான சூழ்நிலை மாறும்.

அரசியல்துறையினருக்கு மேலிடத்




துடன் கருத்து வேற்றுமை உண்டாக லாம் கவனம் தேவை. எடுத்துக்கொண்ட காரியங்களில் நிதானத்தைக் கடைபிடிப் பது நல்லது. நண்பர்களிடம் பக்குவமாக பேசுவது நன்மை தரும். எந்த காரியத் திலும் சாதகமான பலன் பெற வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பய ணங்களின் போது கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் திருப்தி யான நிலை காணப்படும். தன்னம் பிக்கை அதிகரிக்கும். கல்வியில் மேன்மை ஏற்படும்.

**அஸ்வினி:** இந்த மாதம் நிலுவை

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வறி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வறி<br>26.02 – புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

யில் உள்ள பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீர எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரணி:** இந்த மாதம் குடும்பத்தின் மீது பாசம் அதிகரிக்கும். அவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதை கழிப்பீர் கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பண வரத்து கூடும். கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்னியம் அதிகரிக் கும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். எதிர்ப்புகள் விலகும். காரிய அனுகூலம் உண்டா கும். ஏதாவது மனக்கவலை இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள்.

**பரிகாரம்:** முருகனுக்கு வெண்பொங் கல் படைத்து வணங்கிவர காரிய வெற்றி உண்டாகும். கவலை தீரும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வெள்ளி.

**சந்திராஷ்டமதினங்கள்:** 20. 21, 22

**அதிஷ்ட தினங்கள்:** 13, 14 .



**ரிஷபம்:**

கிரகநிலை - இராசியில் குரு(வ) - தன வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - பஞ்சம ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன் - தொழில் ஸ்தானத்தில் சனி - லாப ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறு கிறார். 11.02.2025 அன்று ராசியில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று பாக்கிய ஸ்தா னத்தில். இருந்து சூரியன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02. 2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பிரயத் தனம் எடுப்பீர்கள். இந்த மாதம் லாப ஸ்தானத்தில் ராசிநாதன் சுக்கிரன் உச்ச மாக இருக்க ராகு இணைந்திருக்க மிக நல்ல யோக காலகட்டத்தில் இருக்கி றீர்கள். நினைத்த காரியத்தை செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் சஞ்சாரத்தால் பணவசதி கூடும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். வாழ்க் கையில் இருந்த அதிருப்தி நீங்கி பிடிப்பு உண்டாகும்.

சுபகாரியங்கள் சம்பந்தமான எதிர் பார்த்த தகவல் வரும். இடமாற்றம் உண்டாகலாம். எதிர்பாராத திடீர் செலவு ஏற்படும்.தொழில் ஸ்தானாதிபதி சனி ஆட்சியாக இருக்கிறார். தொழில் வியாபாரத்தில் சுப செலவு ஏற்படும். எதிர்பார்த்த லாபம் குறையலாம். புதிய ஓடர்களுக்காக கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் அகலும். எதிர்பார்த்த பணி இடமாற்றம் கிடைக்கும்.குடும்பாதிபதி புதன் தொழில்

## தெய்வ சிந்தனை அதிகரிக்கும்!

ஸ்தானத்தில் இருப்பதால் குடும்பத்தில் அடுத்தவர்களால் பிரச்சினைகள் தீரும்.

உங்களது கருத்துக்கு மாற்றுக் கருத்து உண்டாகலாம். கணவன், மனைவிக் கிடையே மனம் விட்டுப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் [illegible] பேசுவது நல்லது. பெண்களுக்கு

மனதில் இருந்த சோர்வு நீங்கி உற் சாகம் உண்டாகும். எதிர்பார்த்த தகவல் சாதகமாக வரும். பணவரத்து கூடும். கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும். கடன் பிரச்சினை தீரும்.

வாக்கு வன்மையால் எல்லா நன்மைகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவு மனத்திருப்தியைத் தரும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களது நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். அரசியல் துறையினருக்கு நீண்ட நாட்களாக




இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வாக னங்களைப் பயன்படுத்தும்போது கவ னம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். நிதி நிலைமை சீர்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும். மனதில் உற்சா கம் ஏற்படும். எதிர்பார்த்த மேல்படிப்பு படிக்க வாய்ப்புகள் கிட்டும்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதிலும் சாதகமான போக்கு காணப்படும். துணிச்சலாக சில முக்கிய

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வறி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வறி<br>26.02 – புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

முடிவுகளை எடுப்பீர்கள். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. காரிய தடை தாமதம் ஏற்படலாம்.

**ரோகினி:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் சிறு தடங்கல்கள் சந்திக்க நேரும். எதிர்பார்த்த பணம் வருவது தாமதப்படும். வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த எடுக்கும் முயற்சிகள் நல்லபலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**மிருகசீரடம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் சிலர் புதிய வேலைக்கு முயற்சி மேற்கொள்வார்கள். குடும்பத் தில் இருப்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்படுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது

**பரிகாரம்:** கனகதாரா ஸ்தோத்திரம் சொல்லி மகாலட்சுமியை வழிபட பணக் கஷ்டம் தீரும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள் :** 23. 24

**அதிஷ்ட தினங்கள்:** 15, 16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களை ஏமாற்றுவது யாவர்க்கும் இலகுவாம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிலிருந்து ஜனாதிபதியாக வெற்றி பெற்றவர்களில் கோட்டாபய ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய அனைத்து ஜனாதிபதிகளும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பதை முன்வைத்தே தேர்தலில் வெற்றி பெற்றனர்.

எனினும் அவர்களில் எவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கருசனை கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

அதிலும் குறிப்பாக, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வெற்றி பெறுவதற்கு மூல காரணம் தமிழ் மக்கள்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என மைத்திரிபால சிறிசேன உரக்கக்கூறியிருந்தார். இருந்தும் அவர் தேர்தலில் வெற்றி பெற்றதும் இனப் பிரச்சினையை மறந்து போனார். இந்த நிலைமை மைத்திரிபால சிறிசேனவுடன் நின்று போகும் என்றால் இல்லை.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் பேசாப் பொருளாக இருக்கப் போவதை நிலைமை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்த நம்பிக்கைக்கு அடிப்படைக் காரணம் நாட்டில் அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்ற அவரின் தேர்தல் கால பிரசாரமாகும்.

ஆம், நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதாக இருந்தால், இனப் பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும். இந்த உண்மை அனைவரும் அறிந்ததே.

அதாவது இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் இந்த நாட்டில் எதனையும் சாதிக்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

நிலைமை இவ்வாறாக இருந்தும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் இனப் பிரச்சினை என்ற விடயம் எடுத்துக் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறு இந்த நாட்டின் ஜனாதிபதி, இனப் பிரச்சினை பற்றிப் பேசாமல்; இனவாதம், மதவாதம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை எனக் கூறி வருவது, இனப் பிரச்சினைக்கான தீர்வாகாதென்பதை முதலில் நம் தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் இனவாதம், மதவாதம் இல்லாமல் போகலாம்.

ஆனால் ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவது இயல்பே.

எனவே ஒரு கால இடைவெளியில் மீண்டும் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் சிக்குமாயின், தமிழ் மக்களின் நிலை என்ன? என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

எனவே இனவாதத்துக்கு – மதவாதத்துக்கு இனி இடமில்லை என்பது பேச்சளவானது மட்டுமே.

ஆக, இங்கு எக்காலத்திலும் இனவாதம், மதவாதம் என்பதற்கு இடமில்லாதவாறு தமிழ் மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். அதைச் செய்யாதவரை நாம் ஏமாற்றப்படுகிறோம் என்பது தான் உண்மை.

# கமல்ஹாசனின் தசாவதார அவதாரங்களை முன்னாள் ஜனாதிபதிகள் எடுத்துள்ளனர்

## யாழில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

இலங்கையினுடைய முன்னாள் ஜனாதிபதிகள் நடிகர் கமல்ஹாசனின் தசாவதாரம் திரைப்படம் போன்று பல அவதாரங்களை எடுத்துள்ளனர். அதனால் தான் அவர்களுக்குப் பல ஜனாதிபதிமாளிகைகள்தேவைப்பட்டுள்ளன என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி-மிருசுவில் கிராமத்தில் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் நாட்டில் மக்களின் பணத்தை வீணடிக்கும் மற்றும் மக்களின் பணத்தை திருடும் அரசியலே இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறையில் 29ஏக்கர் நிலப்பரப்பில் ஜனாதிபதிமாளிகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகை காங்கேசன் துறையில் மாத்திரமல்ல நுவரெலியா, அநுராதபுரம், மகியங்கனை, கதிர்காமம், கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலும் உள்ளன.

எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் கமல்ஹாசனின் தசாவதாரம் படம் போன்று தசாவதாரம் எடுத்துள்ளனர். அதனால் தான் இத்தனை ஜனாதிபதி மாளிகைகள் தேவைப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை மக்களுக்குப் பயனுள்ள ஏதேனும் திட்டத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-7,30)

## சிங்களவர் - தமிழர் என்ற வேறுபாடு இன்றி செயற்படுவோம் - அநுர

சிங்களவர் - தமிழர் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களையும் ஒன்றிணைத்த அரசாங்கமாக எமது அரசாங்கம் திகழும் என ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன, மத பேதமின்றி அனைத்து மக்களையும் ஒன்றிணைத்த அரசாக நாம் இருக்க விரும்புகிறோம்.

ஏற்கனவே ஆட்சியில் ணஇருந்தவர்கள் இன, மத பேதத்தை விதைத்துவிட்டார்கள். அனைவரையும் ஒன்றிணைத்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டை மீட்க முடியும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடக்கும் நாட்டை மீட்டெடுக்க முடியும் என்றார். (ம-7)

### வவுனியாவில் இரட்டைக் கொலை

## கைதானவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடித்து வழக்கு விசாரணையை வவுனியா நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் யூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு விண்ணப்பித்துள்ளார்.

அதன் வழக்கு விசாரணை வரவுள்ளதால் விளக்கமறியலை நீடித்து வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம-7,250)

## ஜனாதிபதி மாளிகை ■ ■ ■ ■ தனியாருக்கு வழங்கவில்லை

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அநுர

காங்கேசனதுறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையினை அரசாங்கம் தனியாருக்கு வழங்கவில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயக் காணி விடுவிப்புத் தொடர்பில் அதிகாரிகளின் கருத்துக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறையில் இருக்கும் ஜனாதிபதி மாளிகையினைத் தனியார் எவருக்கும் அரசாங்கம் வழங்கவில்லை.

குறித்த மாளிகையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த மாளிகையினைப் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

மேற்குறித்த மாளிகை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கட்டப்பட்டது. இதனைத் தனியாருக்கு தாரைவார்த்ததாகப் பல்வேறுபட்ட கருத்துக்கள் எழுந்துள்ள நிலையில் ஜனாதிபதியின் கருத்து அதற்கு முற்றுப்புள்ளி இடும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### தலைமன்னார் கடற்பரப்பில் கைதான

## 17 இந்திய மீனவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில்

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று வெள்ளிக்கிழமை(31) உத்தரவிட்டார்.

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்களின் வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 24.12.2024 அன்று கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதல் கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் – பகுதி – II

12

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### 02 துணுக்காய் பிரதேச சபை

துணுக்காய் பிரதேச சபையில் மொத்தமாக 20 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை யாவும் தனி உறுப்பினர் வட்டாரங்கள் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 8 ஆகும்.

துணுக்காய் பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 308.77 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 10258 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 7137 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

**துணுக்காய் பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | துணுக்காய் பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 8 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 8 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 13 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேண்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,783 | 49.55% | 6 | 6 | - | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,084 | 19.30% | 3 | 1 | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 686 | 12.21% | 2 | - | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 606 | 10.79% | 1 | 1 | - | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 295 | 5.25% | 1 | - | 1 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 149 | 2.65% | - | - | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 14 | 0.25% | - | - | - | - |
| மொத்தம் | 5,617 | 100% | 13 | 8 | 5 | - |

**துணுக்காய் பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | அம்பாள்பெருமாள் குளம் | MUL 24, MUL 25, MUL 35 | ITAK | 345 |
| 2 | புத்துவெட்டுவான் | MUL 23, MUL 33, MUL 34 | TULF | 258 |
| 3 | உயிலங்குளம் | MUL 18, MUL 32 | ITAK | 197 |
| 4 | துணுக்காய் | MUL 16, MUL 17, MUL 26 | UNP | 317 |
| 5 | மல்லாவி | MUL 20, MUL 27 | ITAK | 433 |
| 6 | அனிச்சியன்குளம் | MUL 31 | ITAK | 476 |
| 7 | யோகபுரம் | MUL 19, MUL 21, MUL 22 | ITAK | 424 |
| 8 | பாரதிநகர் | MUL 28, MUL 29, MUL 30 | ITAK | 479 |

### 03.புதுக்குடியிருப்பு பிரதேச சபை

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் மொத்தமாக 46 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை யாவும் தனி உறுப்பினர் வட்டாரங்கள் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 12 ஆகும்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 1029.39 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 41823 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 33867 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), சுயேச்சைக் குழு (IND), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

அதாவது நிகவேவா இடது கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி வவுனியா மாவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இப் பிரதேச சபை 13 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை யாவும் தனி உறுப்பினர் வட்டாரங்கள் ஆகும்.

**புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | புதுக்குடியிருப்பு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 12 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 12 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 22 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேண்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 11,771 | 47.18% | 9 | 11 | - | 2 |
| சுயேச்சைக் குழு | 4,463 | 17.89% | 4 | 1 | 3 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,857 | 11.45% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,136 | 8.56% | 2 | - | 2 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,541 | 6.18% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,030 | 4.13% | 1 | - | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 911 | 3.65% | 1 | - | 1 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 164 | 0.66% | - | - | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 76 | 0.30% | - | - | - | - |
| மொத்தம் | 24,949 | 100% | 20 | 12 | 10 | 2 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 24,949 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 459 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 25,408 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 33,867 |

**புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | விசுவமடு | MUL 49, MUL 50 | ITAK | 839 |
| 2 | பாரதிபுரம் | MUL 51, MUL 52 MUL 53 | ITAK | 524 |
| 3 | உடையார்கட்டு | MUL 46, MUL 47 | ITAK | 1297 |
| 4 | முப்புரம் | MUL 44, MUL 45 MUL 48 | ITAK | 1252 |
| 5 | கோம்பாவில் | MUL 42 | ITAK | 1035 |
| 6 | புனிதவளநகர் | MUL 37, MUL 38, MUL 39, MUL 40, MUL 43. | IND | 1128 |
| 7 | புதுக்குடியிருப்பு கிழக்கு | MUL 36, MUL 41, MUL 54 | ITAK | 1389 |
| 8 | முத்தையன்கட்டு | MUL 55, MUL 56, MUL 60, MUL 63, MUL 64 | ITAK | 621 |
| 9 | பண்டாரவன்னி | MUL 57, MUL 58, MUL 59, MUL 65, MUL 66 MUL 67, MUL 68 | ITAK | 1227 |
| 10 | தண்டுவான் | MUL 62, MUL 123, MUL 124, MUL 125, MUL 126, MUL 127 | ITAK | 598 |
| 11 | ஒட்டுசுட்டான் | MUL 61, MUL 69, MUL 70, MUL 71, MUL 72 | ITAK | 776 |
| 12 | திருமுருகண்டி | MUL 73, MUL 74, MUL 75, MUL 76 | ITAK | 1199 |

### 04.கரைதுறைப்பற்று பிரதேச சபை

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் மொத்தமாக 51 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் 50 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 1 கிராம அலுவலர் பிரிவின் பகுதிப் பிரதேசமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 13 ஆகும். கரைதுறைப்பற்று பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 765.74 சதுர கிலோமீற்றர்கள் ஆகும்.

2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 34643 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 26 773 ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிச் சூடு...

கிச் சூட்டு சம்பவத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் T56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், குறித்த மூவரும் மதுபானம் அருந்திக் கொண்டு இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் இருவர் 29 மற்றும் 54 வயதுடையவர்கள் என்பதோடு, மற்றையவரின் வயது உறுதிப்படுத்தப்படவில்லை.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை ஹினிதும பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## சுப்பர் டீசல்...

விலைத் திருத்தத்தின்படி நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, லங்கா சுப்பர் டீசலின் விலை 18 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 331 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில்...

தாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத வியாபாரங்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

அதன்போது கருத்துத் தெரிவித்த பிமல் ரத்நாயக்க,

தான் இராமநாதபுரம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளுக்கு மக்கள் சந்திப்புக்குச் சென்ற சமயம் அப்பகுதி மக்கள் பொலிஸாரின் விரும்பத்தகாத செயற்பாடுகளால், பொலிஸார் மீது நம்பிக்கை இழந்து விரக்தி நிலையில் உள்ளனர்.

சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தால், உடனேயே சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு அந்த தகவல் செல்கின்றன எனத் தெரிவிக்கின்றனர்.

தமது பகுதியில் பொலிஸ் நிலையம் இருந்தும் சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், எதற்காக பொலிஸ் நிலையம், அதனை மூடிவிடுங்கள் என என்னிடம் தெரிவித்தனர் என மேலும் தெரிவித்தார்.

அதற்கு பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் பதில் அளிக்கையில், கீழ் நிலை பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது நம்பிக்கையீனம் இருந்தால், மேலதிகாரிகளுக்குத் தகவல் வழங்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தால் அந்தத் தகவல் வழங்கியவர் தொடர்பில், சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனக் கூறினார். (ம-7,33)

## கடவுச்சீட்டு...

செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வடக்கில் வவுனியாவில் மாத்திரம் கடவுச்சீட்டு அலுவலகம்காணப்படுகிறது. இதனால் யாழ்.மாவட்ட மக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள் என யாழ்.மாவட்ட பிரதி அரசாங்க அதிபர் பிரதீபனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும் வகையில் விரைந்து யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரவித்தார். (ம-7)

## தமிழ் இளைஞர்...

யில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பட்டதாரிகள் அரச நியமனம் தொடர்பில் பேசும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் அரச திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 30 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதில் 20 ஆயிரம் வெற்றிடங்கள் பொலிஸ் திணக்களத்திலேயே உள்ளன.

தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் திணைக்களத்தில் இணைய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வந்தால் அது நாட்டின் பாதிப் பிரச்சினையைத் தீர்த்துவிடும்.

வெற்றிடங்களை அடையாளம் கண்டு அதனை நிவர்த்தி செய்ய வேண்டும். வெறுமனே பட்டம் பெற்றவர்கள் என்ற ரீதியில் வேலை வாய்ப்பை வழங்கிவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## மாவை...

உடலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அஞ்சலி செலுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு அநுர குமார திஸாநாயக்க நேற்று விஜயம் செய்திருந்த நிலையில் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். (ம-7)

## பொலிஸ்...

டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதை ஒழிப்புத் தொடர்பில் பொதுமக்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் பொலிஸார் செயற்படவில்லை.

போதைவஸ்து தொடர்பில் தகவல் வழங்குபவர்களை பொலிஸார் குற்றவாளிகளுக்கு அடையாளம் காட்டுகின்றனர் என அதிகாரிகளானால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலிஸாரே இவ்வாறு நடந்தால் எப்படி போதை ஒழியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் போதை ஒழிப்புப் பிரிவுக்கு நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ தகவல் வழங்கினால் அது இரகசியத் தன்மையுடையதாய் இருக்கும். இதைவிடுத்து பொதுமக்களின் தகவல்கள் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் தவிர்ந்து வேறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கினால் நாம் தவறு செய்பவர்களை எவ்வாறு அடையாளம் காண முடியும். அவர்களுக்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுக்க எடுக்க முடியும் எனத் தெரிவித்தனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 5733
W 0 6 2 0 1 1
அத சம்பத
W 2 0 1 1
சீட்டிழுப்பு இலக்கம் 308
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1763
Z 29 49 64 75 Z
Double Chance 94615

மெகா பவர்
திகதி 31/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2081
X 19 30 32 45 71

ஜய JAYA
திகதி 2025.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 0001
Q 1 5 3 6
ரூ.1,000,000/- 443799
ரூ.100,000/- 03145
மோட்டார் வண்டி 1257986

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3975
சீட்டிழுப்பு திகதி 31.01.2025
M 12 59 77 78
M
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 1042
தனுசு 37 42 52 53 தனுசு
23757 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
31.01.2025 441
C 8 7 4 7 8 2
60895
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,220,176.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2707
சீட்டிழுப்பு திகதி 2025.01.31 தினம் வெள்ளிக்கிழமை
20 43 69 70 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,342,053.60
DLB

சனிதா
திகதி 31.01.2025 வெற்றி வாரம் 4868
02 31 44 69 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,782,457.20
66597
DLB

சசிரி
வெற்றி வாரம் 612
31.01.2025
16 36 47
வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4419
சீட்டிழுப்பு திகதி 31.01.2025 தினம் வெள்ளிக்கிழமை
02 40 48 56 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,386,943.60
227438
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 28 25 40 46 59
1883
31.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,760,952.40
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2533
சீட்டிழுப்பு திகதி : 2025.01.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,610,459.20
அட கோட்டிபதி ADA KOTIPATHI
05 09 18 45 C
359765
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி...

திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

இந்திய உச்ச நீதிமன்ற (புதுடெல்லி) நீதியசர் அரங்க.மகாதேவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருக்குறள் வளாகத்தைத் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக தினமணிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கி.வைத்தியநாதன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளார்.

திருக்குறள் வளாகத்தில் 1330 திருக்குறள்களும் கருங்கல்லில் செதுக்கி ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை நாளை காலை திருக்குறள் வளாகத் திறப்பு விழா இடம்பெறுவதுடன் மாலை அரங்க நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-7)


## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்
ரூபாய் 9999/= மட்டுமே
செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கி கொள்ளுங்கள் சென்ற முறை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம். முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள். (795)

**077 434 6245**

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் சிறுவர் பராமரிப்பு வேலைக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை.

- முகாமையாளர்
- சமையலாளர்
- பராமரிப்பாளர்

உடன் தொடர்பு கொள்ளவும்.

**071 535 4500** (790)

## தேவை

யாழ்ப்பாணத்தில் 25 ஏக்கர் கடற்கரைக்காணி 33 வருடக் குத்தகைக்கு ஒரு ஆரோக்கிய ரிசார்ட்டை உருவாக்குவதற்காக உடனடியாகத் தேவை. (3295)

**070 319 8683**
**070 550 9228**
**Land@thezenx.com**

## கடை வாடகைக்குத் தேவை

யாழ். பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையிலும் பெரியகடை வீதி, மின்சார நிலைய வீதி மற்றும் கே.கே. எஸ் வீதியில் முட்டாஸ் கடைக்கு முன்னால் பான்சி மொத்த வியாபாரம் மேற்கொள்வதற்கு 20 X 40 அளவுடைய கடை வாடகைக்கு உடனடியாகத் தேவை. (3288)

**077 595 8178**

## IELTS - 01.02.2025 New Batch ஆரம்பம்

(Academic - General and Life Skill A1)
இத்துடன் Basic & Advance English Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
By : B.MURALI - 077 798 9830 (3287)

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (3289)

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-2173)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி - கோண்டாவில்

### இணைந்த கணிதம்
### A.பத்மநாதன்

A/L
2024 மீட்டல்
2025 வகுப்புக்கள்
2026 வகுப்புக்கள்

- பௌதிகவியல் : திரு. T.சம்பந்தன்
- இரசாயனவியல் : திரு. S.சுரேஸ்குமார்
- உயிரியல் : திரு. R.குகானந்தன்

வகுப்புக்கள் ஆரம்பம் : 02.02.2025
ஞாயிறு 4 மணி நேரசூசி மாற்றப்படும்
உங்கள் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்

- நிர்வாகி -
தொடர்புகளுக்கு: (3271)
**0777 960 138/ 076 105 6556**

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கோண்டாவில் இராசபாதை வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இராசபாதை வீதி முகப்புடன்
- இராசபாதை வீதிச் சந்தியிலிருந்து ½ Km தூரம்
- திருநெல்வேலி சந்தை 2 Km தூரம்
- யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் 5.5 Km தூரம்
- செம்மண்தரை, நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை எண்பது இலட்சம் (80 லட்சம்)
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நல்ல சூழல், வியாபார நிலையம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை (3290)

**070 290 2338, 076 069 1105**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 226/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2710/= | |
| 1Kg கீரிச் சம்பா அரிசி | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 975/= | ~~1050/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |



400g Anchor 990/= ~~1050/=~~



400g நெஸ்டமோல்ட் 735/= ~~788/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (801)
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 181, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org